**செய்தி வெளியீடு எண்: 878** **நாள்: 04.12.2018**

## செய்தி வெளியீடு

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாற்றுத் திறனுடையோர் சங்கங்களின் கூட்டு இயக்கம் சார்பில் அதன் நிர்வாகிகள் திருவாளர்கள் B. ஜான்சிராணி S.நம்புராஜன், பேராசிரியர் T.M.N. தீபக், S. அண்ணாமலை, P. மனோகரன், S. ரவிச்சந்திரன், M.சித்ரா, P. சுபத்ரா ஆகியோர் கீழ்க்காணும் கோரிக்கைகள் தொடர்பாக 03.12.2018 பிற்பகல் 4.00 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம், அவர்களை சந்தித்தார்கள்

1) மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ஐ முழுமையாக செயல்படுத்துதல்.
2) மாற்றுத் திறனாளிகள் நல விதிகள் 2018–ஐ மறுஆய்வு செய்தல்.
3) அரசாணை (நிலை) எண் 151, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 16.10.2008–ன்படி 2ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு காலமுறை ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல்.
4) மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் ஊர்தி படி / இலவச பயணச் சலுகை ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை களைதல்.

மேற்படி கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் அவர்கள் தலைமையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலாளர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுடன், பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தையின்போது மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம் அவர்கள், கோரிக்கையினை கனிவுடன் அரசு பரிசீலிப்பதாக, தெரிவித்ததன் அடிப்படையில் போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**